# காலைக்கதிர்
**Kalaikkathir**

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 19 வியாழக்கிழமை 03.04.2025 கதிர் 146


# தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று ஜனாதிபதிக்கு எதிராக முறையீடு

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை தவிர்த்து ஏனைய வேட்பாளர்களை எவ்வித மான அடிப்படைகளுமில்லாமல் ஊழல்வா திகள் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பிரதிவாதிகளுக்கு இழைக்கும் அநீதியாகும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிடுவதுகுறித்துதேர்தல்கள்ஆணைக்குழு தமது சுயாதீன அதிகாரத்துக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியால யத்தில் நேற்று முறைப்பாடளித்ததன் பின்னர் ஐக்கியகுடியரசுமுன்னணியின்உபதலைவரான தீக்சன கம்மன்பில தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மார்ச் 31 அன்று வெலிகம பகுதியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் 'ஊழல், மோசடியற்ற குழுவினர் வெற்றிப் பெறும் பிரதேச சபைகளுக்கு மாத்திரமே, மத்திய ஆளும்தரப்பால்மானியங்கள்ஒதுக்கப்படும். அவ்வாறான குழு தேசிய மக்கள் சக்தியிடமே உள்ளது'என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிறைவேற்றுத்துறை ☞ 2

## அமைச்சரவை அனுமதி

இலங்கையில்குடிவரவுகுடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு விடயங்கள் தொடர்பான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது வவுனியாவிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்குப் பயணம் செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

வடமாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரித சேவைகளை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென, 2025 ஜனவரி 31 அன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்மொழியப்பட்டுள்ள யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் இம்மாதத்திலேயே நிறுவுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பாதிக்கப்பட்ட மியான்மருக்கு 1 மில்லியன் டொலர் உதவி

### அறிவித்தது இலங்கை

மியன்மாரில்கடந்தவாரம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் பல்லாயிரக்கணக்கானமக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக மருத்துவ உதவிகளுடன், ஒரு மில்லியன் டொலர் நிதி உதவியையும் வழங்குவதற்குஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

இந்த நில அதிர்வால் மியன்மார்மக்கள்பெரும்பாதிப் புக்களுக்கு உள்ளாகியுள் ளதுடன், தற்போது 2,700பேர் வரைஉயிர்நீத்துள்ளமையை சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அத்துடன், அதிகளவானோர் காணாமல்போயுள்ளனர் எனவும், மேலும் பலர் விபத்துக்களில் சிக்குண்டு மருத்துவமனைகளில்சிகிச்சை பெற்றுவருவதாகவும்தகவல் வெளியாகியுள்ளது.

பௌத்த நாடுகள் எனும் வகையில் மியான்மருடன் பேணப்பட்டுவரும் நீண்ட காலத் தொடர்புகளைக் கருத் தில்கொண்டு, மியன்மார் மக்களுக்கு ☞ 2

## கனேடிய முதலீட்டாளரிடம் ரூ. 4 கோடி பணம் மோசடி

### அதற்காகவே அருண் தம்பிமுத்து கைது

கனடாவில் வசிக்கும் முதலீட்டாளர் ஒருவரிடம் இருந்து 4 கோடி ரூபா பணத்தினை மோசடி செய்த குற்றத்திற்காகவே அருண் தம்பிமுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவில் இருக்கும் முதலீட்டா ளர்ஒருவர்மட்டக்களப்பில்இறால்தொழிற் சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

சுமார் 10 கோடி ரூபா முதலீட்டில் இந்த திட்டத்தினை மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில், அதில் 4 கோடி ரூபாய் பணம் அருண் தம்பிமுத்துவிடம் வழங்கப்பட்டுள்ளது.

வாங்கிய பணத்தில் இறால் பண்ணைக்குரிய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல், மொத்தப் பணத்தினையும் அருண் தம்பிமுத்து மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக குறித்த முதலீட்டாளர் அருண்தம்பிமுத்துவுக்கு எதிராக முறைப்பாடளித்திருந்த நிலையில், நேற்று அவர் பாசிக்குடா பகுதிக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டார்.

## மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தடை மேலும் ஒரு நாள் நீடிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள்நிராகரிக்கப்பட்டதை சவாலுக்குஉட்படுத்திமேன்முறையீட்டுநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சிநிறுவனங்கள் தொடர்பாக இன்றுவரை தேர்தல்நடவடிக்கைகளைத் தொடர வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று மீண்டும் குறித்த தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

இந்த மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில், பிறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிக்குப் பதில் அசலைச் சமர்ப்பித்தவர்களின் வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்தில் இணக்கம் எட்டப்பட்டது.

அதன்படி, ஏற்கனவே ஏற்றுக்கொள்வதற்கு இணக்கம் வெளியிடப்பட்ட வேட்புமனுக்கள் தவிர, ஏனையவேட்பமனுக்களுக்குஅமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக இன்று வரை நடவடிக்கைகள் எடுப்பதைத் தடைசெய்துநீதிமன்றம் மேலும் ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. ☞ 2

## நாளை வருகிறார் இந்தியப் பிரதமர் பாதுகாப்பு ஒப்பந்தமும் கைச்சாத்து

இந்திய பிரதமர் நரேந்திர மோடி நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சனிக்கிழமை கொழும்பிலிருந்து பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ள பிரதமர் மோடி, வலுசக்தி, சுகாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடவுளளார் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்நேற்றையவாராந்தசெய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய பிரதமர் நரேந்திர மோடி வெள்ளியன்று இலங்கைக்கு வருகிறார். 5 மற்றும்6ஆம்திகதிகளில்பல்வேறுநிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். அதற்கமைய ☞ 2

### மோடி வருகையையொட்டி

## கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

பாரத பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 4 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) இலங்கைக்கு வருகைத்தர உள்ள நிலையில், அவரது விஜயத்தை முன்னிட்டு இலங்கை பொலிஸாரால் விசேட போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்பட உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பாரத பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட உள்ள விசேட போக்குவரத்து திட்டம் தொடர்பில் நேற்று அறிவித்தார். அவர் மேலும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா அண்மையில் கோலாகலமாக நடந்து முடிந்தது. தமிழர், சிங்கள வர், முஸ்லிம்கள் என அனைவரும் கூடிக்கொண்டாடி குதூகலித்துக் கலைந்திருந்தனர். வழக்கம்போல ஒரு திருவிழாவாக நிகழ்வு நடந்து முடிந்தது. திருவிழாக்களைவிடவும் பெருமளவில்பணமும்வியாபாரமும் புழங்கும் நிகழ்வுகளாக யாழ்ப் பாணத்துப் பட்டமளிப்பு ☞ 2

## 42 பேர் இன்னும் துப்பாக்கிகளை ஒப்படைக்கவில்லை

உயிர் பாதுகாப்புக்காக வழங்கிய துப்பாக்கிகளை திருப்பித் தருமாறு பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இன்னும் 42 நபர்கள் தங்கள்துப்பாக்கிகளைஒப்படைக்கவில்லை என்றுஅமைச்சரவைப்பேச்சாளர்அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைமுடிவுகளைஅறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில்நேற்றுஇடம்பெற்றபோது இதனைத் தெரிவித்தார்.

துப்பாக்கிகளை ஒப்படைக்காத நபர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா? அல்லது அவர்கள் நாட்டில் வசிக்கிறார்களா? என்பதுகுறித்துவிசாரிக்கப்பட்டுவருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

"துப்பாக்கிகளை ஒப்படைக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அமைச்சர் கூறினார்.

## விசாரணை தொடக்கம்

ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 22 பேர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் 'பீ' அறிக்கையை சமர்ப்பித்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி யவர்களுள் பிரபல அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்குகின்றனர் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இனி இது .....

விழாக்கள் குறைவில்லாமல் நடக்கின்றன.

அதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பலக்கலைக்கழகம் என்பது போதைப்பொருள் பாவனையின் மையமாக மாறி இருக்கின்றது, அதைனைச் சுத்தம் செய்யவேண்டும்என்றுஅதன்கலைப்பீடாதிபதி ரகுராம் ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார். அவரால் தூண்டப்பட்ட மாணவர்கள் சிலர் போதைப் பொருளுக்கு எதிராகத் தாம் போராட்டங்களில் ஈடுபடப்போகிறார்கள் என்று பகிரங்கமாக அறிக்கை எல்லாம் விட்டார்கள். (பட்டமளிப்புவிழாவையொட்டி கரைபுரண்டோடிய மது போதையை இந்தப் போதைப் பொருள் வரிசைக்குள் சேர்க்கக்கூடாது. அது வேற போதை, இது வேற போதை).

கலைப்பீடாதிபதியின் தன்முனைப்புக்கும் அவருக்கிருந்த ஊடக ஆதரவுக்கும் இந்த வாய்ப்பைச்தனக்கெதிராகச்சரியாகப்பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சந்தர்ப்பவாதத்திற்கும் பயந்துபோன துணைவேந்தர் கலைப்பீடாதிபதியைச் சமாளித்து மீண்டும் பணிக்கு கொண்டுவருவதற்காக அவர் கோரியபடி ஒரு மாணவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் வகுப்புத் தடை விதித்தார்.

சட்டத்துறை மாணவனான அவர் தன்னைப்பற்றி சமூக ஊடகங்களில் அவதூறு பேசினார் என்றும் எப்படித் தன்னைப்பற்றி அவர் ஊடகங்களில் பேசமுடியும் அதனால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ரகுராம் பிடிவாதம் பிடித்ததால், இந்தப் பிரச்சினையை முடித்து வைக்கும் முகமாகத் துணைவேந்தரும் அந்த மாணவனுக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியதுடன் வகுப்புத் தடையும் விதித்திருந்தார்.

உண்மை என்னவென்றால், பல்கலைக்கழகத்தில்தமக்கெதிராகமேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மாணவர்களுக்கு ஆதரவாக இந்த சட்டத்துறை மாணவர் செயற்பட்டார் என்பதே அவர் மீதான காழ்ப்புணர்வுக்குக் காரணம். கலைப்பீடாதிபதியான தன்னை ஒரு மாணவன் எப்படி எதிர்த்துக் கதைப்பது என்கிற தன்முனைப்பே (ஈகோ) இதற்குக் காரணம்.

இது அந்த மாணவனுக்கும் தெரியும் என்பதால் தன் மீதான நடவடிக்கை வரை காத்திருந்த மாணவன், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடினார். வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கு இந்த மாதம் மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது. அதற்கிடையில் அவசர அவசரமாகத்துணைவேந்தரிடம்இருந்துமாணவனுக்குஒருகடிதம்அனுப்பப்பட்டிருக்கின்றது. அவரிடம் கேட்கப்பட்ட விளக்கத்திற்குக் கிடைத்த பதிலை அடுத்து அவருக்கு எதிரான நடவடிக்கை அனைத்தும் கைவிடப்படுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில்வழக்குநடக்கும்நிலையில் அங்கு தங்களை நிறுத்தி வைத்து கேளாக் கேள்வி கேட்பதற்கு முன்னர் ஒழுக்காற்று நடவடிக்கையைக் கைவிட்டுவிட்டால் தப்பிவிடலாம் என்று பல்கலைக்கழக நிர்வாகம் வழிபண்ணுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆக மொத்தத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களை மிரட்டவும், அடிபணிய வைக்கவும், தங்கள் தன்முனைப்பை நிலைநிறுத்தவுமே ஒழுக்காற்று நடவடிக்கையைப் பயன்படுத்துகின்றன என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அப்படியில்லை எனில் இந்த வழக்கை எதிர்கொண்டு,தாம்நேர்மையாகநடந்துகொண்டிருப்பதாக நீதிமன்றத்தில் நிரூபித்திருக்க வேண்டும்பல்கலைக்கழகநிர்வாகம். ஆனால், பேராசிரியர்களதும்பீடாதிபதிகளதும்சுயவிருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவே மாணவர்களின் கல்வி வாழ்க்கை தீர்மானிக்கப்படுகின்றது என்கிற குற்றச்சாட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்நீண்டகாலமாகஉண்டு. சுருக்கமாகச் சொன்னால் நிர்வாகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் இணக்கமாக இருக்கும் மாணவர்களால் பரீட்சைகளிலும் மிளிர முடியும், பணி நேர்முகத் தேர்வுகளிலும் மிளிர முடியும், முரண்பட்டால் உங்களுக்கு எல்லமே"கைகளில்"தான் கிடைக்கும் என்பது இங்கு பிரபலமான வாக்கியத் தொடர். அதனை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் நிகழ்வுதான்இப்போதுசட்டத்துறைமாணவன் சிறீகஜன்மீதானஒழுக்காற்றுநடவடிக்கையை கைவாங்குவதாகத்துணைவேந்தர்அவருக்கு அறிவித்திருப்பது.

இந்தக் கடிதத்துடன் மாணவர் தரப்பு வழக்கைக் கைவிடும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் எதிர்பார்க்கிறது. ஆனால், தாம் செய்தது தவறு என்று நீதிமன்றத்தில் வந்து பல்கலைக்கழக துணைவேந்தரும் பொறுப்பு வாய்ந்தவர்களும் ஒத்துக்கொள்ளாத வரைக்கும்இந்தவழக்கைக்கைவிடுவதில்லை என்பதில் மாணவர் தரப்பு திடமாக நிற்கின்றது. தமது தன்முனைப்புக்காக மாணவர்களின் வாழ்க்கையை எந்த எல்லைவரைக்கும் சென்றுபாழாக்கமுன்னிற்கும்ஆசிரியர்களால் வடிவமைக்கப்படும்வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருப்பட்ட மாதிரித்தான்.

உதாரணத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போதைப் பழக்கம் அதிகரித்துவிட்டதுஎன்றுபரப்புரைசெய்யப்பட்டு அதற்கெதிராக கொந்தளித்தவர்கள், அதன் பின்னர்ஒருஆணியைக்கூடப்பிடுங்கவில்லை என்பதுதான் நிதர்சனம்.

இந்த விவகாரம் தொடர்பில் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இந்தப் பத்தியில் நான் தெரிவித்திருந்தவிடயங்களைஅப்படியேகீழே தருகின்றேன்.விடயங்களின்தொடர்ச்சியையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்வீட்டரசியலைப் புரிந்துகொள்வதற்கும் அது உதவும்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் விவகாரத்தைச்சுற்றிதொடர்ந்துஎழுந்துவரும் நிலமைகள்நிர்வாகத்தைஆட்டிவைக்கின்றன. மாணவர்கள் மீதான ஒழுக்காற்றுப் பிரச்சினையை போதைப் பொருள் பயன்பாட்டுப் பிரச்சினையாகத் திசை திருப்பி மக்களையும் நம்பவைத்து சிலர் ஆடிய ஆட்டத்திற்கு வளைந்துகொடுக்கப் போய், இன்று அவமானப்பட்டு நிற்பவர் துணைவேந்தர்தான்.

பேராசிரியர் ரகுராம் பதவி விலகிப் போட்ட போதைப்பொருள் நாடகத்தினை அடுத்து, அவரை மீண்டும் பதவியேற்க வைப்பதற்காக நடந்த பேச்சுக்களில் சிறீகஜன் தன்னைப் பற்றி சமூக ஊடகங்களில் தெரிவித்த கருத்துக்களுக்காக அவர் தண்டிக்கப்படவேண்டும் என்பதை முக்கியமான நிபந்தனையாக வைத்திருந்தார் என்று தெரிகிறது. துணைவேந்தர் தரப்பு வட்டாரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இதையடுத்தே அவரது கோரிக்கையின்படி மாணவருக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது என்றும் அவை தெரிவிக்கின்றன.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போன்று, ஏற்கனவே ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கப்பட்ட மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள், நிலைப்பாடுகளுக்குஆதரவாக நின்ற சிவகஜன் மீதே கலைப்பீடாதிபதியின் நிர்ப்பந்தத்தால் துணைவேந்தர் நடவடிக்கை எடுக்கப்போக, வசதியாக அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக இடைக்காலத்தடையும், பின்னர்நிவாரணமும் கேட்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்திலும் பல்கலைக்கலைக்கழக நிர்வாகத்தின் தரப்பில் பெரும் பலவீனங்கள் காணப்படுவதால் மாணவர் கோரும் நிவாரணம் அவருக்கு உடனடியாகவே கிடைக்கும் வாய்ப்புக்களே அதிகம் இருப்பதாகச்சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதையடுத்து அவசர அவசரமாக நேற்று சிவகஜனுக்கு வழங்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்கி உத்தரவிட்டிருக்கிறார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறீசற்குணராசா. நேற்று சனிக்கிழமை. ஆனாலும் வகுப்புத் தடை நீக்க கடிதம் உடனடியாகபல்கலைக்கழத்தின்அனைத்துத் துறைசார் தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அந்தக் கடிதத்தை வந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறும் மாணவனுக்கு நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ''இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை. திங்கட்கிழமைகடிதத்தைப் பெற்றுக்கொள்கின்றேனே" என மாணவனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு,"இல்லையில்லை இரவு எத்தனை மணியானாலும் வந்து கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தத் தகவலின் உண்மையைத் தன்மையை முழுமையாக உறுதிப்படுத்த முடியவில்லையாயினும் நேற்றிரவு இந்தக் கதைகள் உலாவந்தபடியிருந்தன.

ஒரு வழக்கைக் கண்டு எவ்வளவு பதறிப்போயிருந்தால் இப்படி அவசரப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்? நிர்வாகத்தில் இருக்கும்போது எடுப்பார் கைப்பிள்ளைபோன்று செயற்படாமல் சட்டதிட்டங்களுக்கும், விதிகளுக்கும் ஏற்ப முறையாகச் செயற்பட்டிருந்தால் இந்த அவலம் வந்திருக்காது. யாருடையதோ அரசியல்தேவைகளுக்கும்கனவுகளுக்கமாக தன்னைக் கேவலப்படுத்திக்கொண்டுள்ளது பல்கலைக்கழகம்.

மாணவனின் வகுப்புத் தடை நீக்கப்பட்டிருப்பதால் தொடரப்பட்ட வழக்கு முடிவுக்கு வந்துவிடும் என்கிற எதிர்பார்ப்பு பல்கலைக்கழகநிர்வாகத்திற்குஇருக்கக்கூடும். ஆனால், இந்த வகுப்புத்தடை கைவாங்கல் கடிதம், பல்கலைக்கழக நிர்வாகம் தவறிழைத்தது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணமாக வழக்குக்குப் பலம் சேர்க்கப்போவதுடன், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, மாணவன் மீதான விசாரணை தொடரும் என்ற வசனம் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்வதைக் குறிப்பதால் வழக்கும் தொடர்வதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

வகுப்புத் தடை நீக்கத்தால் வழக்கைக் கைவிடும் நிலையில் மாணவன் தரப்பும் இல்லை என்று தெரிகிறது. தங்கள் பிரச்சினையைச் சமாளிக்க இப்போது கைவாங்குவது போன்று கைவாங்கிவிட்டு, பின்னர் பழிவாங்கக்கூடும் என்கிற அச்சமே அதற்குக் காரணம்."

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரமிக்க ஜனாதிபதி தனது அதிகாரத்தை நேரடியாகபயன்படுத்திமத்தியஆளும்தரப்பால் மானியங்கள்வழங்குவதுகுறித்துதீர்மானிப்பது தேர்தலுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் ஒரு செயற்பாடாகும் .

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் அபிவிருத்திகள் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு மற்றும் உரிய உள்ளூராட்சிமன்றங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதியின் கூற்றில் அரச அதிகாரிகள் தமது அரசியல் நோக்கங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை தவிர்த்து ஏனைய வேட்பாளர்களை எவ்விதமான அடிப்படைகளுமில்லாமல் ஊழல்வாதிகள் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பிரதிவாதிகளுக்கு இழைக்கும் அநீதியாகும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிடுவதுகுறித்துதேர்தல்கள்ஆணைக்குழு தமது சுயாதீன அதிகாரத்துக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று எமது முறைப்பாட்டில் வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதிக்கு எதிராகவே தேர்தல்கள் ஆணைக்குழுவில்முறைப்பாடளித்துள்ளோம். சுதந்திரமான முறையில் தமது வேட்பாளரை தெரிவு செய்யும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை தவிர்த்து ஏனைய உறுப்பினர்களை ஊழல்வாதிகள் என்று குறிப்பிடுவது முறையற்றது.

சகல வேட்பாளர்களின் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## மேன்முறையீட்டு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்இந்தவழக்கின்மேலதிகபரிசீலனை இன்று பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது. கொழும்புமாநகரசபைஉட்படபலஉள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, சர்வஜன அதிகாரம் மற்றும் சுயேச்சை குழுக்கள் உள்ளிட்ட கட்சிகள் இதுவரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சுமார் 30 மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

## கொழும்பில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த்த தாவது:

பாரத பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 4ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) இலங்கைக்கு வருகைத்தர உள்ளார். பாரத பிரதமரின் வருகையை முன்னிட்டு இலங்கை பொலிஸாரால் விசேட போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. அதற்கமைய 4ஆம் திகதி பிற்பகல் 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பேஸ்லைன் ஆகிய வீதிகள் போக்குவரத்துக்காக பல சந்தர்ப்பங்களில் மூடப்படும்.

அதற்கமைய அன்றைய தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்ல உள்ள பயணிகள் மற்றும் ஏனையோர் முன்கூட்டியே மாற்று வீதிகளினூடாக தமது பயணத்தை திட்டமிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு ஏப்ரல் 5ஆம் திகதி (சனிக்கிழமை) காலி முகத்திடல், சுதந்திர சதுக்கம் மற்றும் பத்தரமுல்ல - அபேகம வளாகம் ஆகிய பகுதிகளை அண்மித்த வீதிகள் பல சந்தர்ப்பங்களில் போக்குவரத்துக்காக மூடப்பட உள்ளது.

வீதிகள் மூடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் சாரதிகளுக்கு ஏற்படும் சிரமங்களை குறைப்பதுடன், சாரதிகளை மாற்று வீதியினூடாக செல்ல வழி நடத்துமாறு போக்குவரத்து கடமையில் ஈடுபட உள்ளஅதிகாரிகளுக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாரத பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட உள்ள போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவசியமான ஆதரவை வழங்குமாறு வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்களிடம் இலங்கை பொலிஸார் கோரிக்கை விடுக்கின்றனர் என்றார்.

## பாதிக்கப்பட்ட....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணங்களைவழங்குவதற்காகஇலங்கை மக்கள் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கல், எமது நாட்டில் பௌத்த பிக்குமார்களால் சேகரிக்கப்படும் பொருட்கள் ரீதியான உதவிகளை விரைவாக மியன்மார் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கான அரச தலையீடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார சேவை ஊழியர்கள் அடங்கிய குழுவொன்றை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மியன்மாருக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில்வைத்திருதல்ஆகியதீர்மானங்களும் அமைச்சரவையால் எடுக்கப்பட்டுள்ளன.

## நாளை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை சுதந்திர சதுக்கத்தில் பிரதமருக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அதன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இரு தரப்பு பேச்சு இடம்பெறவுள்ளது

பேச்சுக்களில்எட்டப்படும்இணக்கப்பாடுகள் தொடர்பில் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கூட்டு ஊடாக அறிவித்தல் வெளியிடப்படும். அதன் பின்னர் சம்பூர் சூரிய மின் உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் மத வழிபாட்டுத் தளங்கள் சிலவற்றுக்கு சூரிய மின் உற்பத்தி கலங்களை வழங்கி வைத்தல் போன்ற நிகழ்வுகளில் பிரதமர் மோடி பங்கேற்பார்.

தொடர்ந்து தம்புளையில் குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலையும் அவரால் திறந்து வைக்கப்படவுள்ளது. இவையனைத்தும் கொழும்பிலிருந்து மெய்நிகர் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன. 6ஆம் திகதி அநுராதபுரம் ஸ்ரீ மகா போதிக்கு சென்று மத வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார். இதன்போது அநுராதபுரத்தில் தொடருந்து சமிஞ்ஞை கட்டமைப்பை திறந்து வைத்தல் மற்றும் தொடருந்துப் பாதையைத் திறந்து வைத்தல் நிகழ்வுகளிலும் பங்கேற்பார்.

இவற்றுடன் வலுசக்தி, சுகாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவுள்ளன. இந்திய பிரதமர் மோடியின் வருகை நிறைவடைந்ததன் பின்னர் இவை தொடர்பில் ஆளும்தரப்பால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# 2025 ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையாக்கத்தை திணைக்களத் தலைவர்கள் நேரடியாகப் பார்வையிடவேண்டும்

## ஆளுநர் வேதநாயகன் அறிவுறுத்து

2025 ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறையாக்கத்தை நேரடியாகச் சென்று திணைக்களத் தலைவர்கள் பார்வையிடவேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை செயலாளர்கள் நடத்தவேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் மீளாய்வுக் கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், தூய்மையான இலங்கை செயற்றிட்டம் எமது மாகாணத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள் தயாரிக்கவேண்டும்.

மேலும் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் தங்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கடமைநேரம், வரவுகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். பொதுமகன் அலுவலகத்துக்கு வந்து அலுவலர்களுக்காகக் காத்திருக்கக்கூடாது. அதேநேரம் டிஜிற்றல் மயமாக்கல் செயற்றிட்டத்தையும் படிப்படியாக நாம் ஆரம்பிக்கவேண்டும்.




2025 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பில் மாத்திரமே வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றத்துடன், பௌதீக முன்னேற்றத்தையும் இணையத்தளத்தில் வெளியிடவேண்டும்.

மேலும் திட்டங்களை அடையாளப்படுத்தும்போது யாராவது சொல்வதையோ, ஒளிப்படங்களில் பார்ப்பதையோ விட ஓரிடத்தை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்தத் திட்டத்தை செய்ய முடியுமா? இல்லையா? என்பது தெரியவரும். மேலும், பின்தங்கிய பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டால்தான் அந்த மக்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம்வரும்.

எனவே, திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் சுழற்சிமுறையில் பின்தங்கிய கிராமங்களை நேரில் சென்று பார்வையிடுங்கள்.



2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் நாம் சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. எனவே, அதற்கான திட்டமிடல்களையும் இப்போதே ஆரம்பியுங்கள். குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் என்பன எவ்வளவு நிதி கிடைத்தால் வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அடையாளப்படுத்தவேண்டும். - என்றார் ஆளுநர்.



இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் -

ஒதுக்கப்பட்ட நிதியை உரிய காலத்துக்குள் செலவு செய்து முடிக்கவேண்டும். கட்டடங்கள் திணைக்களம் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருக்கின்றார்கள். திணைக்களத் தலைவர்களும், அமைச்சின் செயலாளர்களும் சரியான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யவேண்டும். - என்றார்.



தொடர்ந்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிதி எஸ்.குகதாசன் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் குறைந்தளவான கட்டுநிதியே விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் சில திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான நிதியை வழங்க முடியாமல் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றோம்.

எனவே இம்முறை ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வளவு கட்டுநிதி விடுவிப்பார்கள்? எப்படி விடுவிப்பார்கள்? என்பது தொடர்பான தெளிவான திட்டவரைவு தேவை எனவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு, வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு ஆகிய 5 அமைச்சுக்களினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன.

இதன்போது திட்டநடைமுறையாகத்தில் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. அது தொடர்பான பொருத்தமான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.



# தென்மராட்சியை இரண்டாக பிரிப்பதற்கு நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உறுதியளிப்பு

(சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதற்கான ஒத்திவைப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதென தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நாடாளுமன்றில் ஒத்திவைப்பு பிரேரணை சமர்ப்பித்து பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தென்மராட்சிப் பிரதேசம் 60கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பாரிய பிரதேசமாகக் காணப்படுவதால் அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

சகல பிரதேசங்களுக்குமான நிதி ஒதுக்கீடு சமனானதாக காணப்படும் பட்சத்தில் தென்மராட்சி பாதிக்கப்படுகின்றது.

எமது அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தீர்க்கும் என நம்புகின்றேன்.

ஆனாலும் நாடு தற்போது தான் வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டு வருகின்றது.

அரசாங்கத்தால்இதற்கெனபெருமளவுநிதியைசெலவிடுவதென்பது சவாலான விடயம். வெளிநாட்டு உறவுகளின் பங்களிப்பும் இதற்கு அவசியம். மக்களின் விருப்பம் பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்பதாகக் காணப்படுவதனால் நிச்சயமாக நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். - என்றார்.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்; -

தென்மராட்சியில் அதிக தேவைப்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் பரந்துபட்ட பிரதேசமாக அது காணப்படுவதால் பிரதேசத்திற்கான ஒதுக்கீடுகள் போதாமல் இருக்கின்றன. கடந்த காலங்களில் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களாக காணப்பட்ட அங்கஜன், சுமந்திரன் மற்றும் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தென்மராட்சியை இரண்டாக பிரிப்பதாக வாக்குறுதியளித்த போதிலும் அதனை நிறைவேற்றத் தவறிவிட்டனர்.

11 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட காரைநகர் ஒரு பிரதேச செயலகமாகக் காணப்படும் போது ஏன் 60கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சியை இரண்டு பிரதேச செயலகங்களாக பிரிக்க முடியாது? எனக் கேள்வி எழுப்பியிருந்தனர்.

தென்மராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கான ஒத்திவைப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் தான் சமர்ப்பிப்பேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஓடிசம் மீதான கவனம்

இலங்கையில் ஓடிசம் நாளாந்தம் வைத்திய சிகிச்சைக்காக வருகைத் தருபவர்கள் அவதானிக்கும் போது 50 சிறுவர்களில் ஒருவர் ஓடிசம் நிலையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவதாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என்று குடும்ப நல சுகாதார பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் ஆசிரி ஹேமமாலா தெரிவிக்கிறார்.

வருடாந்தம் சித்திரை 2 உலக ஓடிசம் விழிப்புணர்வு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இம்முறை 'மாற்றங்களை கொண்டாடுவோம்' என்ற தொனிப்பொருளுக்கமைய அனுஷ்டிக்கப்படுகிறது. குழந்தையின் மூளை நரம்புகளில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு ஓடிசம் நிலை எனப்படுகிறது. நோயைத் தொடக்கத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சைகளை தொடர்ச்சியாக பெறும் பட்சத்தில் ஓடிசம் நிலையால் பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களின் மூளை நரம்புகளின் வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். அவர்களும் சாதாரண சிறுவர்கள்போலகற்றல்உள்ளிட்ட அனைத்துசெயற்பாடுகளிலும் ஈடுபட உரிமை உண்டு. உலகில் பல சாதனைகளை புரிந்த நபர்களும் தனக்கு ஓடிசம் இருந்ததாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

வழக்கமானநபர்களிடம்இல்லாதபலதிறமைகள்அவர்களிடம் உள்ளது. உலகளாவிய ரீதியில் தற்போது ஓடிசம் உள்ளிட்ட நரம்பியல் குறைபாடு நோய்களால் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இலங்கையில் 2009 ஆம் ஆண்டு 8 மாத குழந்தைகளிடையே மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்போது 93 சிறுவர்களில் ஒருவருக்கு ஓடிசம் குறைபாடுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு உலகளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளின் அடிப்படையில் 36 சிறுவர்களில் ஒருவருக்கு ஓடிசம் உள்ளதாக தெரியவந்துள்ளது.

“இலங்கையில் ஓடிசம் தொடர்பான ஆய்வு சமீபகாலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் நாளாந்தம் வைத்திய சிகிச்சைக்காக வருகை தருபவர்களை அவதானிக்கும் போது சமூகத்தில் உள்ள 50 பேரில் ஒருவருக்கு ஓடிசம் பாதிப்புள்ளதாக வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்” என்கிறார் ஆசிரி ஹேம மாலா. அதாவது நாட்டின் மொத்த மக்கள் எண்ணிக்கையில் இரண்டு சதவீதம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 லட்சம் பேருக்குப் பாதிப்பு என்பது மிகப் பெரிய எண்ணிக்கை.

ஓடிசம் எனப்படும் மூளை நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடு நோயால் பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களுக்கு, நரம்பியல் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கான சிகிச்சைகள் இந்த வருடம் முதல் வழங்கப்படஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.. அதற்கமைய நோயை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான ஆலோசனைகளை உள்ளடக்கிய கையேடு சுகாதார அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு, கண்டி, கம்பஹா, களுத்துறை, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய 6 மாவட்டங்களை கேந்திர நிலையமாக கொண்டு ஓடிசம் குறைபாட்டால் பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களுக்கான பிரதியோக சிகிச்சை நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்தோடு எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து ஆதார வைத்தியசாலைகளிலும் ஓடிசம் மற்றும் நரம்பியல் குறைபாடு நோய்க்கான இடத்தை ஒதுக்கி, சிறுவர்களுக்கான சிகிச்சைகளை வழங்கவும் சுகாதார அமைச்சு எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சிறப்பானவைதான். ஆனால் சரியான மதிப்பீடுகள் இன்றி சிறப்பான திட்டமிடலை மேற்கொள்வது முடியாத காரியம். எனவே உடனடியாக ஒட்டிசம் தொடர்பான ஆய்வு மேற்கொள்வது அவசியம். குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்த ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# நீதிக்காக துணிந்து நின்ற இளம் பெண் சட்டத்தரணி

(முஹம்மது ஜிப்ரான்)

பெருநாள் தினத்திலும் நீதிக்காக துணிந்து நின்ற இளம் சட்டத்தரணி நதிஹா அப்பாஸ் அவர்களையும் அதட்டுக்கு பலமாக இருந்த மல்வானையை சேர்ந்த நீதிபதி லாபர் தாஹிர் அவர்களையும் இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

இவ்வாறான ஒரு சம்பவத்தை நீங்கள் திரைப்படத்தில் மட்டுமே பார்க்கலாம். ஆனால் அது நிஜமாகவே நம் நாட்டில் நடந்தேறியுள்ளது.

நீதி நீர்த்துப் போகக் கூடாது என்பதற்காக, பல ஆண்டுகளுக்குப் பின்னர் நீதிமன்றக் கதவுகள் விடுமுறை நாள் ஒன்றில் தட்டித் திறக்க வைக்கப்பட்டிருக்கிறது.

இளம் சட்டத்தரணி நதிஹா அப்பாஸைப் பொறுத்தவரை, மார்ச் 28 ஆம் திகதி, வழக்கமான நாளாகவே தொடங்கியது.

அவர் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் அன்றைய வழக்குகளைக் கையாளுவதில் மும்முரமாக இருந்தார். அப்போது தான் அந்த பரபரப்பான தகவல் அவரது காதை எட்டியது.

சக சட்டத்தரணி பிரியங்கா உதயங்கனியை சிறைக்கு அனுப்பப்படுவதற்காக புத்தளம் மேல் நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்பதே அந்த செய்தியாகும். திகைத்துப்போன நதிஹா, விவரம் கேட்டறிய புத்தளம் மேல் நீதிமன்றம் விரைந்தார்.

இந்த பிணக்கின் ஆரம்பப் புள்ளி சென்ற வருடம் ஓகஸ்ட் மாதமாகும்.

அப்போது ஒரு வழக்கில் ஆஜரான சட்டத்தரணி பிரியங்காவின் நடவடிக்கை தொடர்பில், புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி 'நதி அபர்ணா' அதிருப்தி கொண்டிருந்தார் .

அதே வழக்கு மீண்டும் இவ்வருடம் மார்ச் மாதம் ஆரம்பத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிபதி, குறித்த சட்டத்தரணி தொடர்பில் முன்னைய சம்பவங்களைக் குறிப்பிட்டுப் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து இருந்தார்.

இதன் பின்னர் கடந்த மார்ச் 28 ஆம் திகதி, நீதிபதி நதி அபர்ணா, 'நீதிபதிக்குரிய மரியாதை வழங்கப்படவில்லை' என்றும்,

'குறித்த தினம் நீதிமன்ற அறைக்குள் பிரவேசிக்கும் போது, தலை வணங்கவில்லை' என்றும், இரண்டு குற்றச்சாட்டுகளைச் சட்டத்தரணி பிரியங்கா மீது சுமத்தி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தொடுத்திருந்தார்.

இதன் அடிப்படையில் பிரியங்கா கைது செய்யப்பட்டு,

பிணை நிபந்தனையாக ரூபா 25 லட்சம் சொத்து மதிப்பு சான்றிதழுடன் இரண்டு சரீர பிணையாளிகள் கொண்டு வர வேண்டும் என்று கட்டளையிட்டு இருந்தார்.

இவ்வாறான ஒரு நிபந்தனை அன்றைய நீதிமன்ற நேரத்துக்குள் பூர்த்தி செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்தது.

இதன் பொருள், அன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆக இருந்ததாலும், அதை அடுத்து வருகின்ற திங்கள்கிழமை விடுமுறையாக இருப்பதாலும், குறைந்தது அடுத்த 4 இரவுகள் பிரியங்கா சிறைச்சாலையில் கழிக்க வேண்டும் என்பதாகும்.

மேல் நீதிமன்றத்தில், நிலைமையைக் கேட்டறிந்த சட்டத்தரணி நதிஹா, புத்தளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவியை நாடி இருந்தார். துரதிஷ்டவசமாக இவ்விடயத்தில் முன்நிற்க புத்தளம் சட்டத்தரணிகள் சங்கம் மறுத்தது.

மேல் நீதிமன்ற நீதிபதியைச் சவாலுக்கு உட்படுத்தும் எந்த செயலும் தாங்கள் எதிர்கொள்ளும் எதிர்கால வழக்குகளைப் பாதிக்கும் என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அங்கு வந்த சிங்கள சட்டத்தரணிகள் உட்பட அனைவரும், பிரியங்காவிடம் தங்கள் அனுதாபத்தை மட்டும் தெரிவித்துவிட்டுச் சென்றனரே ஒளிய யாரும் அவருக்காக வாதாட முன் வரவில்லை.

அவர்களின் சுயநலம், மூன்று புலன்களையும் முற்றாக முடங்கச் செய்திருந்தன.

நேரம் வேகமாக நகர்ந்துகொண்டு இருந்தது. தனது சொந்த நலனைப் பாதுகாக்க, எல்லோரையும்




போல் அமைதி கொள்வதா அல்லது நீதிக்காகப் போராடுவதா என்ற இரண்டு தேர்வுகளில் ஒன்றை நதிஹா மிக விரைவாக எடுத்தாக வேண்டி இருந்தது.

நோன்பு மாதத்தின் புனித 27 ஆம் நாள் வணக்கத்திற்காக அதற்கு முந்திய இரவு அதிகாலை வரை விழித்திருந்த நதிஹா, நோன்புடன் இருந்தார்.

அன்றைய நாள் முழுவதும் ஒரு சொட்டு நீர் கூட பருகாமல் உடலளவில் சோர்ந்திருந்த நாதியாவின் காதுகளில் ஓர் இறை வசனம் காதோரம் அசரியாக ஒலித்தது.

'இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருங்கள், அவ்வாறு இருப்பது, உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினர்களுக்கோ பாதகமா இருப்பினும் சரியே! '

பல ஆண்கள் பூனை போல் பதுங்க, நதிஹா தனியாக நீதிபதி முன் தலை நிமிர்த்தி வாதாடத் தொடங்கினார்.

'கௌரவ நீதிபதி அவர்களே, இவ்வழக்கின் எதிராளி இதே நீதிமன்றத்தின் பலவருடம் பணியாற்றும் சட்டத்தரணி. எனவே இவர் விசாரணையைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

மேலும் நீங்கள் கூறும் பிணை நிபந்தனையை உடனே நிவர்த்தி செய்யும் சாத்தியமும் இல்லை.

எனவே, ஒன்றில் பிணை நிபந்தனையை நீங்கள் தளர்த்த வேண்டும் அல்லது அவற்றை நிறைவு செய்யக் கால அவகாசம் தரவேண்டும்'

இவ்வாறான நியாயமான வாதம் பொதுவாக நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனால் நீதிபதி அபர்ணா ஒற்றை வசனத்தால் அதை நிராகரித்து சட்டத்தரணி பிரியங்காவைச் சிறைக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தார்.

மேலும் பிரியங்காவிற்கு எவ்வித சலுகையும் வழங்கப்படக் கூடாது என்றும் சிறை அதிகாரிகளுக்கு மேலதிக உத்தரவும் பிறப்பித்தார்.

நீதிபதியின் நோக்கம் மிகத் தெளிவானதாக இருந்தது. சட்டத்தரணி பிரியங்கா சிறை வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுவதை எல்லோரும் கவலையுடன் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

நதிஹாவோ ஓய்வதாக இல்லை. நடைபெற்ற சம்பவத்தை எழுத்துமூலம் அறிக்கையாகத் தயாரித்து நடந்த அநீதியை ஊடகங்களில் பகிரங்கப்படுத்தினார். அதில், நீதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக தான் உணர்வதாகத் தெரிவித்தும் இருந்தார்.

மேல்நீதிமன்றநீதிபதியின்உத்தரவு தொடர்பில் இவ்வாறான ஒரு கருத்தை எழுத்து மூலம் தெரிவிக்க அதீத துணிவு அவசியமானதாகும். இதில் சிறிய சறுக்கல்களும், அவரது சட்டத்தரணி தொழிலிற்கே உலை வைத்துவிடும்.

நதிஹாவைப் பொறுத்தவரை '... நீதியின் மீது நிலைத்திருங்கள்...' என்பதைத் தவிர வேறு எதைப் பற்றியும் கவலை கொள்வதாக இல்லை.

நதிஹாவிடம் தகவல் பெற்ற சட்டத்தரணிகள் சங்க தலைமையகம், குறித்த தீர்ப்பை மேல் முறையீடு நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவது என்று தீர்மானித்தனர். ஆனால் அதில் ஒரு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

## நீதிக்காக...

நடைமுறைச் சிக்கல்

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இருந்தது. திங்கள் வரை நீதிமன்ற விடுமுறையாக இருந்தது.

தாமதமாகும் நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம்.

அவசரத்தைப் புரிந்துகொண்டு, சட்டத்தர ணிகள் சங்கம், ஓர் அரிதான வேண்டுகோளை விடுத்தது.

அதாவது, இவ்வழக்கை அவசரமாக விசாரிக்க,

திங்கள் - பொதுவிடுமுறை நாளில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தைத் திறக்க வேண்டும்.

இவ்வழக்கை தாமதப்படுத்துவது, நாட்டில் நீதியின் நிர்வாகத்தில் கடுமையான விளைவை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையும் அந்த கோரிக்கையில் இணைந்து இருந்தது.

விளைவு ?

ஒரு வரலாற்று நிகழ்வாக, மேல்முறையீட்டு நீதிமன்றம், விடுமுறை என்றும் பாராமல், நீதிக்காக அதன் கதவுகளைத் திறந்து கொண்டது.

திங்கள் கிழமை, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், நீதிபதி முஹம்மத் லபாருக்கு பெருநாளாக இருந்தபோதிலும், அவர் நீதிபதி பெர்னாண்டோவுடன் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். ஒற்றை தொலைப்பேசி அழைப்பில், சட்டமா அதிபர் திணைக்களமும் அதன் பிரதிநிதிகளை அங்கு அனுப்பியிருந்தது.

விடங்களை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், பிரியங்காவின் விடுதலைக்கு உடனடி உத்தரவைப் பிறப்பித்து மட்டும் இன்றி,

புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி அபர்ணா உட்பட, சம்பந்தப்பட்ட தரப்பினரை ஏப்ரல் மாத இறுதியில் மேலதிக விசாரணைகளுக்காக, மேல்முறையீட்டு நீதிமன்றம் வருமாறும் உத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்ற உத்தரவுடன், தனிப்பட்ட முறையில் வாரியபொல விரைந்த சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ரஜீவ, பிரியங்காவின் அநியாய சிறைவாசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்த வழக்கு இலங்கை சட்ட வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தாலும், துணிச்சலான நபர்கள் உறுதியாக நிற்கும்போது நீதி மேலோங்கும் என்பதை இச் சம்பவம் காட்டியம் கூறுகிறது.

இங்கு இவை எல்லாவற்றுக்கும் மகுடமாகச் சட்டத்தரணி 'நதிஹா அப்பாஸ்' மிளிர்கிறார்.

சுயநலமான மௌனத்தை விடவும், நீதிக்கான குரலை அவர் தேர்ந்தெடுத்திருந்தார்.

ஈற்றில் ஒரு சத்தம் மட்டும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது.

# பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் சோலர் மின்விளக்குகள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர்)

ஆஸ்திஸ்ரேலியா, சிட்டி நகரத்தில் இயங்கிவரும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 201என்.5 சிட்டினிக் கிளைத் தலைவியும் பிரபல சமூக ஆர்வலருமான திருமதி லைலா மகாதேவனின் நிதி அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் 70 வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் மாணவர்களுக்கு பாதணிகளும், 50 மாணவர்களுக்கு சோலார் மின்விளக்குகளும் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை திருகோணமலை கோபாலபுரம் தமிழ் மிஷன் கலவன் பாடசாலையிலும் கும்பிறுப்பிட்டி தமிழ் மிஷன் கலவன் பாடசாலையிலும் இடம்பெற்றது.







கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை விருத்தி செய்து அவர்களுக்கு தேவையான பௌதீக வளங்களை நிவர்த்தி செய்யும் நோக்குடன் திருகோணமலை மக்கள் சேவை மன்றம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் 'மகிழ்ச்சியான கற்றலை நோக்கி....' என்ற தொணிப்பொருளின் கீழ் மேற்படி இரு வகையான உதவித்திட்டங்கள் சர்வதேச லயன்கழகத்தின் சிட்னி மாவட்டக் கிளை தலைவியால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக சர்வதேச லயன்கழத்தின் சிட்னி நகரக் கிளையின் தலைவியும் பிரபல சமூக ஆர்வலருமான திருமதி லைலா மகாதேவன் கலந்து கொண்டதுடன் மேற்படி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், பவுன்டேஷன் போ குட்நஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# திரின்கோ ரி – 20 லீக் இறுதிப் போட்டி

(ஹஸ்பர்)

2025 திரின்கோ ரி-20 லீக் (மூன்றாம் பருவம்) மிகுந்த எதிர்பார்ப்புடன் 30 மார்ச் 2025 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் 12 அணிகள் பங்கேற்றன. மேலும் இது ஒரு லீக் வடிவ கிரிக்கெட் தொடராக நடைபெற்றது.



மொத்தம் 34 லீக் போட்டிகள் நடைபெற்றன. இதில் சிறப்பாக செயல்பட்ட நான்கு அணிகள் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றன. இறுறிப் போட்டியில் அலெக்ஸ் ஸ்போர்ட்ஸ்கிளப்மற்றும்டெய்லிஸ்ட்ரைக்கர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் கோப்பைக்காக கடுமையாக மோதின.

இந்த விழாவிற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை பெருமைப்படுத்தினார்.

தனது அபாரமான ஆட்டத்தால் அலெக்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் 2025 சாம்பியன் பட்டத்தை வென்று வரலாற்று சாதனை படைத்தது.



# காணாமல் போன மீனவர் சாவாற்றில் சடலமாக மீட்பு

(தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)

கடந்த திங்கட்கிழமை நெய்னாகாடு சாவாற்றில் மீன் பிடிக்கச் சென்றவர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வேளையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கல்முனை - பாண்டிருப்பைச் சேர்ந்த செல்வராசா என்று உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது -

அம்பாறை - இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு சாவாறு பகுதியில் நண்பருடன் திங்கட்கிழமை மாலை வேளையில் மீண்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் தனது கணவரைக் காணவில்லை என மனைவி செவ்வாய்க்கிழமை காலை இறக்காமம் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த மீனவரின் நண்பரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, காணாமல் போனவர் பிற்பகல் 3.00 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் செல்லராசா வெற்றி வேல் ( பெரிய தம்பி) பெயருடைய செல்லப்பா வீதி, பாண்டிருப்பு 01 ஏ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார். இதனை உறவினர்கள் உறுதி செய்துள்ளனர்.

மீட்கப்பட்டவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# பொதுவிளையாட்டு மைதானம் சாய்ந்தமருதில் மறுசீரமைப்பு

(ஸாகிர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிப்புள்ளாகி, பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட சாய்ந்தமருது வொலிவேரியன் பிரதேசத்தில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ்

நேற்று (புதன்கிழமை) அரசமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா தலைமையில் சீரமைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை ஆகியோரின் ஒத்துழைப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, விளையாட்டு கழகங்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட இந்நிகழ்வில், கல்முனை மாநகர பொறியியலாளர் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை ஆணையாளர் உட்பட சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# வவுனியாவில் வழிபாடுகளுடன் பிரச்சார பணியை ஆரம்பித்தது கோடாரி சின்ன சுயேட்சைக் குழு

வவுனியா மாநகர சபையில் கோடாரி சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு -01 பூஜை வழிபாடுகளின் பின் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

வவுனியா, குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில்இடம்பெபற்றவிசேட வழிபாடுகளின் பின் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகர சபை குடியிருப்பு வட்டார வேட்பாளரும், சுயேச்சைக் குழுவின் தலைவருமான சி.கிரிதரன் மற்றும் மாநகரசபையில் குறித்த சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த முதன்மை வேட்பாளர் சி.கிரிதரன், கடந்த காலங்களில் மக்கள் மாறி மாறி பல கட்சிகளுக்கும் வாக்களித்து வெறுப்படைந்து போயுள்ளதுடன், மக்களுக்கான சேவைகள் கூட உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் மக்களில் இருந்து ஒருவனாக இந்த ஊரைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையில் எமது மண்ணை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்களுடன் இந்த தேர்தலில் சுயேச்சையாக களமிறங்கியுள்ளோம். உங்கள் அபிலாசைகளும், எண்ணங்களும் நிறைவேற வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சுயேட்சைக் குழு ஒன்றிக்கும் அதன் கோடாரி சின்னத்திற்கும் உங்கள் வாக்குகளை வழங்குங்கள். - என்றார். 100




காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்புக்கு மன்னாரில் 4ஆம் ஆண்டு அஞ்சலி நேற்று

காலம் சென்ற மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 10 மணியளவில் மன்னாரில் நஷ் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு முன் நடை பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உருவச் சிலைக்கு அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் அடிகளார் உள்ளடங்களாக அருட்சகோதரி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை சமூக சம நீதிக்காய் தமிழ் தேசிய உணர்வுடன் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக்குரலாக பல சவால்களுக்கு மத்தியிலும் இன உணர்வுடன் இன உணர்வுக்காய் அறப்பணி புரிந்தார்.

நீண்ட காலமாய் சுகவீனமடைந்திருந்த மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இயற்கை எய்தமையும் குறிப்பிடத்தக்கது.



# உலக சுகாதார நாளை முன்னிட்டு கோப்பாயில் நேற்று ஒன்றுகூடல்



உலக சுகாதார நாளை முன்னிட்டு சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புதன்கிழமை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

அமெரிக்க சான்போட் மருத்துவ கல்லூரியின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பேராசிரியரும் வைத்திய நிபுணருமாகிய தவம் தம்பிப்பிள்ளை கலந்து சிறப்பித்தார்.

அங்கில நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வை ஆசிரிய மாணவி தர்மினிசம்பத்குமார் முன்னிலைப்படுத்தினார்.



டேவிட் லிஜானி அதிதி அறிமுக உரையை ஆற்றினார். தினேஸ் கௌசியா ஆரோக்கியமான வாழ்விற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் ஒழுக்கங்கள் என்ற பொருளில் உரை ஆற்றினார்

ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா தயாரித்த உலக சுகாதார நாளை ஒட்டிய விவரண படம் காட்சிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை 2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் முதன் முதலில் தாய் ஒருவரின் சிறுநீரகத்தைப் பெற்று அவரது மகளுக்கு பொருத்தி சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதனை கௌரவிக்கும் வகையிலும் கலாசாலைக்குரிய திறன் பலகை வகுப்பறை அமைவதற்கு உறுதுணை புரிந்த வகையிலும் கலாசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# ஒரே இடத்தில் தொடர்ந்து விபத்து கிரான்குளத்தில் வீதியில் அவலம்

## நேற்றும் ஒருவர் இறப்பு



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கிரான்குளம் விஷ்னு ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

மேற்படி இடத்தில் புதன்கிழமை காலை கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்து மின் கம்பத்தில் மோதியிருந்தது. அதில் காரைச் செலுத்தி வந்த சாரதி தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளதுடன், கார் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் அந்த கார் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மின்கம்பத்தில் மோதியதால் மின்கம்பிகள் அறுந்த நிலையில் அப்பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டிருந்தது.

இது இவ்வாறு இருக்க சம்பவ இடத்துக்கு விரைந்த மின்சாரசபை ஊழியர்கள் தடைப்பட்டிருந்த மின்சாரத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் தனது மகனுடன் சென்ற ஒருவர் குறுக்கே இருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டுள்ளனர். இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழைந்துள்ளார். எனினும் அவருடன் பயணித்த மகன் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அதே இடத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் குறித்த மின் கம்பிகள் அறுந்திருந்தாலும் மின்சார பழுதுபார்க்கும் வேலைகள் நடைபெறுகின்றன என்பது தொடர்பாக சமிக்ஞை ஏதுமின்றி மிச்சார சபை ஊழியர்கள் செயற்பட்டதன் காரமாகவே இவ்விபத்துச்சம்பவம் மீண்டும் அதே இடத்தில் இடம்பெற்றதாக அங்குள்ள பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தாந்தாமலையில் யானை தாக்கி குடும்பப் பெண் பரிதாபச் சாவு

## மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் புதன்கிழமை அதிகாலை காட்டுயானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாந்தாமலை, ரெட்பானா கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான மாமாங்கம் சந்திரா என்பவரே இந்த சம்பவத்தில் பலியானவராவார்.

தனது வீட்டு வளவினுள் புகுந்த யானைகளைக் கண்டு குறித்த பெண் உயிர் தப்புவதற்காக ஓடிய போது காட்டு யானை மறித்து தாக்கியதில் இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் பட்டிப்பளை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி டினேஸ்வரன் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தை பிரேத பரிசோதனைக்கு பணித்தார்.

பொலிஸார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைச்சேனையில் 9 கிராம் 30 மில்லி கிராம் ஐஸ் போதையுடன் வியாபாரி ஒருவர் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனையில் போதை பொருள் வியாபாரி ஒருவரை 9 கிராம் 30 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் செவ்வாய்க்கிழமை இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவதினத்தன்று இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனை கோழிக்கடை வீதியிலுள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டனர்.

இதன்போது வியாபாரத்துக்காக வைத்திருந்து 9 கிராம் 30 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றியதுடன் 28 வயதுடைய வியாபாரியை கைது செய்து ஒப்படைத்துள்ளனர்.

# ஏப்ரல் 10 முதல் 4 நாள்கள் திருப்பாடுகளின் நாடகம்



திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு 'வெள்ளியில் ஞாயிறு' என்னும் பெயரில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 ,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடகமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை ,சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வருகின்றது.இம்முறை மேடையேற்றப்படும் 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2010 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துரு ,நெறியாள்கையில் தயாராகும் 'வெள்ளியில் ஞாயிறு' துயரமும் சிலுவைகளும் இல்லாது வெற்றியும் மகிழ்ச்சியும் இல்லை. நல்லனவற்றுக்கான மானிடத்தின் துயரங்களும் பிரயத்தனங்களும் தான் வெற்றியைத் தருகின்றன என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டுள்ளது.

வழமை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் 'வெள்ளியில் ஞாயிறு' அரங்கேறத் தயாராகின்றது.





# யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுசம்பவத்துடன்தொடர்புடைய குற்றச்சாட்டில்மூன்றுஇளைஞர்கள்வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இளைஞர் ஒருவர் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கானதில் அவரது கைவிரல் துண்டிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திவந்த பொலிஸார் மூன்று இளைஞர்களை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் முன்னெடுக்கப்பட்டவிசாரணைகளின்போது அவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள், மூன்று கஜேந்திரா வாள்கள் உட்பட ஏழு வாள்கள், இரண்டு அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றைபொலிஸார்கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து, கைதான மூவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனியார் துறை ஊழியர் சம்பள அதிகரிப்புக்குச் சட்டத் திருத்தம்

தனியார்துறை ஊழியர்களின் மாதாந்த குறைந்தபட்ச ஊதியத்தை 27,000 ரூபாவாக அதிகரிப்பதற்கான சட்டத் திருத்தங்களை முன்வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் மே மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போது, தனியார் துறை ஊழியர்களுக்கான மாதாந்த குறைந்தபட்ச ஊதியம் 21,000 ரூபாவாக உள்ளது. இந்த ஊதிய உயர்வு இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட முன்மொழிவுக்கு ஏற்ப உள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இந்த திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதைத்தொடர்ந்து தனியார்துறைஊழியர்களுக்கானமாதாந்த குறைந்தபட்சசம்பளத்தை அடுத்த ஆண்டு 35, 000 ரூபா வரை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு இன்று

ஐக்கியமக்கள்சக்தியின்வருடாந்தமாநாடுஇன்றுவியாழக்கிழமை கட்சி தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெறவுள்ளது. 'தொலைதூரம் காண்போம் :அணி திரள்வோம் :எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் இன்று மதியம் 1 மணிக்கு கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பமாகவுள்ள இம்மாநாட்டில் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தேசிய நிறைவேற்றுக் குழுவிற்கான பத்திரங்களை சமர்ப்பிக்கப்படவுள்ளன. தொடர்ந்து அவரால் மாநாட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதனையடுத்து கட்சியின் நடப்பாண்டுக்கான அலுவலர்கள் குழாம் அறிவிக்கப்படவுள்ளது. அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், தவிசாளர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர் மற்றும் பொருளாலர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர். எனினும் தற்போது காணப்படும் இந்த பதவிகளில் மாற்றங்கள் ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் பிரதி பதவிகளில் புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவ்வாண்டுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர்களும் அறிவிக்கப்படவுள்ளனர். கட்சியின் மாநாட்டு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு, புதிய தலைவரின் விசேட உரையும் இடம்பெறவுள்ளது.

மாநாட்டு தீர்மானங்கள் 4 முன்வைக்கப்படவுள்ளன. அவற்றில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல், தேசிய பாதுகாப்பு, சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு, பிரிவினைவாத அரசியல் அரசியல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் முன்மொழிவுகள் முன்வைக்கப்படவுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய மீனவர்களுடனான சந்திப்பு தீர்வுக்கான நல்லதொரு சமிக்ஞை

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையப் பேச்சாளர் அன்னராசா தெரிவிப்பு

இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு நல்ல தீர்வை காண்பதற்குரிய நல்ல சமிக்கையாக தமிழக மீனவர்களின் சந்திப்பு அமைந்தது என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்ன லிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை நடத்திய ஊடக சந்திப்பின்போதே இவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கின்ற இந்தியாவினுடைய பாரத பிரதமர் நரேந்திர மோடி ஐயா அவர்கள் இலங்கைக்கு வருவதை இட்டு வடக்கு கடற்கரை சமூகம் வரவேற்பதோடு மகிழ்ச்சியும் நாங்கள் அடைகின்றோம்.

அதேபோன்று நீண்ட காலமாக புரையோடிப் போய் இருக்கின்ற இலங்கை இந்திய மீனவருடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை ஏற்றுவதற்கு பாரத பிரதமரும் இலங்கையினுடைய ஜனாதிபதியும் விட்டுக்கொடுப்போடு நல்லெண்ண அடிப்படையிலே சுமுகமான தீர்வு ஒன்றை மேற்கொண்டு வடக்கு மாகாணத்தை பிரதிபடுத்துகின்ற 50,000 குடும்பங்கள் இரண்டு லட்சம் மக்களுடைய வாழ்வாதாரம் தொடர்பானகரிசணையை எடுத்து இந்த இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வை ஏற்றுவதற்கு வழிகோலும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கடற்றொழில் சமூகத்திற்கு தென்படுவதோடு அதை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். - என்றார்.

# சிறு விபத்தால் மாவடிப்பள்ளி பாலத்தடியில் ஒரு கி.மீற்றல் தூரத்திற்கு வாகன நெரிசல்

(பாறுக் ஷிஹான்)

மாவடிப்பள்ளி பாலத்தடியில் ஏற்பட்ட சிறு விபத்து காரணமாக வாகன நெரிசல் ஏற்பட்ட சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றதுடன் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி ஒடுங்கிய பாலம் உள்ள பகுதியில் நேருக்கு நேர் பஸ்ஸூம் ஓட்டோவும் நெருக்குண்டு விபத்திற்குள்ளாகின.

இதனால் குறித்த பாலத்தில் இரு வாகனங்களும் சிக்கிக்கொண்டதுடன் அம்பாறையில் இருந்து கல்முனை அக்கரைப்பற்று நோக்கி சென்ற வாகனங்களும் கல்முனை அக்கரைப்பற்று பகுதியில் இருந்து அம்பாறை நோக்கி மாவடிப்பள்ளி ஊடாக செல்ல முற்பட்ட சகல வாகனங்களும் இச்சம்பவத்தினால் போக்குவரத்து செய்ய முடியாமல் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை தரித்து நின்றன.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த காரைதீவு பொலிஸார் உள்ளிட்ட உரிய அதிகாரிகள் குறித்த விடயங்களை சீராக்கியதுடன் தொடர்ந்தும் குறித்த பாலத்தின் ஊடாக ஏனைய வாகனங்கள் செல்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

சுமார் பல ஆண்டு காலமாக மாவடிப்பள்ளி ஒடுங்கிய பாலமானது காணப்படுவதுடன் தற்போது உடைந்து சிதைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# பழுதடைந்த பழ விற்பனை அம்பாறையில் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

பழுதடைந்தபழவிற்பனைகாரணமாக நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ,காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பழங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் இவ்வாறு பழுதடைந்த பழ வகைகள் விற்பனை அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக வெள்ளரிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம், கொய்யாப்பழம், பலாப்பழம், பப்பாசி, மாதுளம்பழங்கள் பழுதடைந்த நிலையிலும் பங்கஸ் தொற்று ஏற்பட்ட நிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் நுகர்வோர்கள் சுகாதார ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சகிலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கமைய மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் திடீர் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் திடீர் களப் பரிசோதனையின் போது ஹோட்டல்கள், உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனால் தற்போது மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள் பொது சுகாதார பரிசோதகர்களின் திடீர் பரிசோதனை தொய்வின் காரணமாக இவ்வாறு பழுதடைந்த பழ விற்பனை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.




# இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதிக்கு ஒரு மாதகால சிறைத்தண்டனை விதிப்பு

(பாறுக் ஷிஹான்)

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின்அடிப்படையில் கைது செய்யப்பட்ட இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதிக்கு ஒரு மாத கால கடுழிய சிறைத்தண்டனை விதித்து அம்பாறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்டு வந்த சட்டத்தரணி பாறுக் ஷாஹீப் என்பவருக்கே இவ்வாறு ஒரு மாத காலம் கடூழிய சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் முஸ்லிம் விவகார குவாஷி நீதிமன்ற நீதிபதியான சட்டத்தரணி எஸ்.எல். பாறுக் நீதிமன்ற சிறைக்கூடத்திற்குள் சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தரின் பொறுப்பிலிருந்த சிறைக் கைதியிடம் சில மாதங்களுக்கு முன்னர் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த விடயம் தொடர்பில் மேலதிக ஆலோசனை உரிய தரப்பினரிடம் பெறப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவ்வழக்கு தவணை செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளை சந்தேக நபரான இறக்காமம் முஸ்லிம் விவகார குவாஷி நீதிமன்ற நீதிபதி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நிலையில் அம்பாறை நீதிமன்ற நீதவானால் ஒரு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதி தொடர்பில் தாபரிப்பு செலவு, பிள்ளைச்செலவு, மோசடி, தகாத வார்த்தை பிரயோகம், நிகழ்நிலை, பண மொசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி வேட்பாளர்களுடன் கலந்தாய்வு

## உயர்மட்ட தலைவர்கள் பங்குபற்றினர்

வவுனியாமாவட்டத்தில்ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கான கூட்டமானது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

வவுனியா, ஓவியா விருந்தினர் விடுதியில் கட்சியின்மாவட்ட அமைப்பாளர் மயூரதன் தலைமையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான முதலாவது கூட்டமாக இக் கூட்டம் அமைந்திருந்தது.

இதில், வவுனியா மாநகரசபை, வவுனியா வடக்குபிரதேசசபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதே சபை என்பவற்றில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களான கட்சியின பொதுச் செயலாளர் தலதா அத்துகோரளை, தவிசாளர் வஜிர அபயவர்த்தன, கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் விதம் தொடர்பாகவும், கட்சியின் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தனர். 100

# கற்பிட்டி நகரில் முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் நடவடிக்கை முன்னெடுப்பு குறித்து கலந்தாய்வு

( ஸகீர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் நடவடிக்கைகள் கற்பிட்டி நகரில் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு கடந்த முறை கற்பிட்டி பிரதேச சபையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது போன்று எதிர்நோக்கியுள்ள கற்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்வதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுகற்பிட்டி பிரதேசசபையின் தலைமை வேட்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில்தலைமையில்அவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் எஸ்.எச் எம் நியாஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளர் எம் எச் எம் ஹில்மி ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் கற்பிட்டி நகரின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் போராளிகள் எனபலரும்கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2025இல் வெளியிடப்பெற்றது